ஓம் சரவணஜோதியே நமோ நம

# ஆறுமுக அரங்கமகானின் குருவார அருளாசி நூல்

11.06.2026

1. ஞானக்கடலாக பேரருள் புரியும்
ஞானபண்டிதா உமை போற்றி
ஞானதேசிகன் யானும் அருளாசியை
ஞாலமதில் பராபவ விடை திங்கள்

2. திங்களிலே சதுர் குருவார அருளாசியாக
தரணியோர் வளமுற உரைப்பேன்
ஓங்காரக் குடில் படைத்து அரங்கனும்
உயர் ஞானம் அருளி வருக

3. வருகவே என் தடம் நோக்கி
வரும் மக்களெல்லாம் முழுமைபட
முருகப்பெருமான் அருளை பெற்று
மேலான நிலை அடைய ஆசி

4. ஆசியுண்டு அரங்கன் என் மார்க்கம்
அணுகி சரணாகதி கண்டவர்க்கு
பேசிட சகல வளமுற ஆசி
பேதமற தானதரும வழிகளை

5. வழிகளையும் ஏற்று வருகவே
வருங்காலம் முருகப்பெருமானே
வழி நடத்திட வாழ்க்கை மாறும்
வளமும் நல்ல மாற்றமும் காணும்

6. காணவே தனவான் பட்டமும்
கருணைமிக்க தருமவானாகவும்
ஞானவானாகவும் சிறந்து நிற்பர்
நம்பிக்கைபட ஞானிகள் பூசை

7. பூசை செய்து சுத்தநெறி வழி
பிறழாது திடமுற கடைப்பிடிக்க
ஆசான் என் துணை பெருக
ஆபத்து கண்டமிலா வாழ்வு காண்பர்

8. காண்கவே அரங்கன் எந்தன்
கருணைமிகுந்த அன்னதானத்தை
முன்மொழிந்து மக்கள் வந்து
முழுமைபட தருமத்தில் பொருளுதவி

9. உதவி செய்து வருதல் காண
உலகத்தில் கருமவினை வென்று
பூதலத்தில் வினை சேரா வண்ணம்
புண்ணியவான்களாக நிலை உயர்வர்

10. உயரவே எங்களின் ஆதரவு
உலகத்தில் அனுகூலம் குறைவிலா
தயவும் நல் ஆசியும் பெருகிட
தரணியில் தனித்துவம் அடைவர்

11. அடையவே உலகமாற்றம் தானும்
ஆறுமுகனார் நடத்த இருக்க
தடையின்றி எந்தன் வழி வருகவே
தரணியில் அற்புதம் நிகழும்
அரங்கனென் குருவார அருளாசி முற்றே.

—சுபம்—

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி போற்றி